1971 டிசம்பர் 13]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மதுரை அண்மையில் மாநகராட்சியாக ஆகியுள்ளது. இது தமிழகத்தின் இரண்டாவது மாநகராட்சியாக உருவெடுத்துள்ளதால், இதனைச் சுட்டிக்காட்டியேனும் மதுரைக்கு அத்தகைய வானொலி நிலையத்தை அமைக்க அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மைய அரசுக்கு அடுத்து ஒரு கடிதம் எழுதும்போது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன இந்தப் புதிய கருத்தும் அதிலே சேர்க்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த அவசர காலத்திலே வடக்கே வேண்டுமென்றால் இப்பொழுது ரேடியோ ஸ்டேஷன் திறக்கக் கஷ்டம் இருந்தாலும்கூடத் தென்பிராந்தியத்திலே கொஞ்சம் வலுவான ஸ்டேஷன் அமைக்க வாய்ப்பிருக்கிறது. எனவே, அம்மாதிரி அமைக்கும் பெரிய ஸ்டேஷனை மதுரையில் அமைக்க, நான்காவது திட்டத்தில் ஆக்க. மீண்டும் அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைத்தான் ஏற்கனவே சொன்னேன், அடிக்கடி, மதுரையில் வானொலி நிலையம் அமைப்பது சம்பந்தமாக, மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்திக்கொண்டே இருக்கும்.

*** 287 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் திட்டங்களை வானொலியில் பிரச்சாரம் செய்ய மத்திய அரசிடம் வானொலியில் தனியே நேரம் ஒதுக்கக் கோரி மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : "வளரும் தமிழகம்" என்ற தலைப்பில் திங்கள் இருமுறை முதல் ஞாயிறும், மூன்றாம் ஞாயிறும் தமிழக அரசால் மக்களின் நலனுக்காக நிறைவேற்றப் படும் பல்வேறு திட்ட ஆக்கப்பணிகளைப் பற்றி பொது மக்களுக்கு எடுத்துக்கூறும் நோக்கத்துடன், பல்வேறு துறைத் தலைவர்களும் வானொலி உரை நிகழ்த்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட நாட்களில் மாலை 6.30 மணிக்கு இதற்காக சுமார் 10 முதல் 12 நிமிடங்கள் வரை வானொலி நிலையத்தார் ஒதுக்கி இருக்கின்றனர். இத் திட்டம் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக செயலில் இருந்து வருகிறது.

அரசு அலுவலகங்களில் வேலை நாட்கள்

*** 298 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அலுவலங்களில் வாரத்துக்கு ஐந்து தினங்கள் மட்டும் வேலை நாட்களாக்குவதற்கு செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, சில வெளிநாடுகளிலே செய்வதுபோல் காலை 8 மணிக்கே அரசாங்க அலுவலகங்களைத் துவக்கி, 2 மணி அளவில் முடிக்கின்ற முறையில் மாற்றியமைக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வெளிநாடுகளிலுள்ள பல்வேறு மாற்றங்களை இங்கே எடுத்துரைக்கும் நேரத்தில், இங்கேயிருப்பவர்கள் அதைச் சுலபத்தில் ஒத்துக்கொள்வதாகயில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, யுத்த நெருக்கடியை முன்னிட்டு மத்திய அரசாங்க அலுவலகங்களில் 11-ம் தேதி இரண்டாவது சனிக்கிழமைகூட வேலைநாட்களாக வைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல மாநில அரசும் இரண்டாவது சனிக்கிழமைகளை யுத்த நெருக்கடியை முன்னிட்டு வேலைநாட்களாக ஆக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவசியமேற்பட்டால் அதுபற்றி யோசிக்கலாம். இப்பொழுதே அரசு ஊழியர்கள் பலர் அரை மணி நேரம் அதிகமாக வேலை செய்யத் தாங்கள் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

Pavement vendors in Madras

* 299 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken by the Government to eliminate the nuisance caused by the pavement vendors in Madras City?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நடைபாதைகளில் பண்டங்கள் விற்போர் போக்குவரத்துக்குத் தடையாகக் காணப்படும் பொழுதெல்லாம் சென்னை மாநகரக் காவலர் சட்டத்தின் கீழ், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. மாநகரக் காவல் துறையினர் சென்னை மாநகராட்சியின் ஒத்துழைப்புடன், 1971 ஆகஸ்டில் சிறப்பு நடவடிக்கை எடுத்து, மாநகரின் சில முக்கியச் சாலைகளிலிருந்து அவர்களை அகற்றி, ஆக்கிரமிப்பு நீக்கினர். நடைபாதைகளில் தொடர்ந்து எவ்வித ஆக்கிரமிப்புகளும் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இந்த நடைபாதையில் கடை வைத்திருந்தவர்கள் பெரும்பாலோர் மலேசியாவிலிருந்தும், பர்மாவிலிருந்தும் இங்கே அகதிகளாக வந்தவர்கள். அவர்கள்